சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 17.03.2026
ம.சா.1 – மோகனகண்ணன் S/o R.பழனியப்பன்
MCOP No.4/2022
(சாட்சி மனுவின் பேரில் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)
குறுக்கு விசாரணை :

என்னுடன் பணியாற்றிய இரணியக்குமார் சிறப்பு சார்பு ஆய்வாளர் Highway patrol லில் பணியாற்றிய நபர்தான் காவல்நிரைலயத்தில் தகவல் கொடுத்தார். விபத்து நடந்த சாலையானது திருச்சி-மதுரை செல்லும் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். திருச்சி-மதுரை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் நாச்சியார் ஓட்டல் அருகே கொடிக்குளம்அருகே பேரிகேட் சாய்ந்து கிடந்தது அதை நிமிர்த்தி வைத்துவிட்டு ஓரமாக நின்று கொண்டிருந்த போது, விபத்து நடந்தது. அவ்வாறு தேசிய நெடுஞ்சாலையில் பேரிகேட் கீழே விழுந்து கிடந்தாலும் அதற்கான சமிக்கை செய்து அதை நிமிர்த்தி தகுந்த எச்சரிக்கை பலகை வைத்து செய்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. என் மீது பல்சர் இருசக்கர வாகனம் மோதி தான் விபத்துக்குள்ளானேன். என் மீது பேரிகேட் தான் விழுந்து காயம்பட்டதா என்றால் இருசக்கர வாகனம் பேரிகேட் மீது மோதி பேரிகேட் என் மீது சரிந்து விழுந்துவிட்டது. இருசக்கர வாகனம் வலது புற ஹேன்பார் மோதியதால் எனக்கு முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டது மேலும் வயிற்றிலும் இருசக்கரவாகன் மோதி தான் காயம், இடது கையிலும், வலது காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை மூலம் பிளேட் வைத்துள்ளேன். நான் சொல்வது விபத்து நடக்கவில்லை என்றும், என்னுடைய கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல., விபத்து நடந்தவுடன் மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றேன். அதற்கான விபத்து பதிவேட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்தால் பாதகமாக அமையும் என்பதால்

அதை வேண்டுமென்றே தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேலூர் மதுவிலக்கு பிரிவில் கான்ஸ்டபிளாக தற்போது பணியாற்றி வருகிறேன். எனக்கு மாதாந்திர சம்பளத்தில்இருந்து Star Health Insuranceக்கு சம்பள் பிடித்தம் செய்வது உண்டு என்றால் சரிதான். Star Health Insuranceசம்பந்தமாக விபத்து தொடர்பாக மருத்துவ சிகிச்சைக்கு பணம் செலுத்தியிருக்கிறனோ என்றால் ஆம் ஆனால் எவ்வளவு என்று தெரியவில்லை. Star Health Insurance மூலம் எவ்வளவு பணம் செலுத்தப்பட்டது என்பதை தெரிவிக்க முடியுமா என்றால் அதனுடைய விபரம் எனக்கு தெரியவில்லை. சம்பந்தப்பட்ட Star Health Insurance சார்பான அதிகாரியை அழைத்து விசாரித்தால் எவ்வளவு தொகை செலுத்தியிருக்கிறார் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். வழக்கில் மீனாட்சி மிஷன் மருத்துவமனையால் வழங்கப்பட்ட இறுதி தொகுப்புபில்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்யவில்லைஎன்றும் இறுதி பில் வந்தால் தான் எவ்வளவு செலவு செய்தேன் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி இறுதி பில்லை வைத்து நான் Star Health Insuranceவைத்து தொகையை செலுத்தியதால் தான் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல நான் தாக்கல் செய்திருக்கும் ம.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களை பொறுத்தவரை உரிய மருத்துவ அலுவலரைவிசாரித்தால் தான் உண்மைதன்மை தெரியவரும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கும் ம.சா.ஆ.4 அசல் ஆவணம்அல்ல என்றும் அது ஒளிநகல் என்று சொன்னால் சரியல்ல. அசல் ஆவணம் தான். அது காலில் உள்ள பிளேட்டை வைத்துள்ளது தொடர்பாக கால் மடக்கி நீட்டமுடியாமல் போனது இதுதொடர்பாக லேசர் சிகிச்சை எடுத்தகொண்டேன் அதற்கான ஆவணம் ஆகும். ம.சா.அ.4 முதல் ம.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் உரிய மருத்துவ அலுவலரை

விசாரித்தால் தான் உண்மைதன்மை தெரியவரும் என்றால் சரிதான். ராவ் மருத்துவமனையில் கையில் வைத்த பிளேட்டை நீக்கினேன் அதற்கான ஆவணத்தை தான் தாக்கல் செய்துள்ளேன். விபத்திற்கு முன்பாக கிரேடு 1 கான்ஸ்டபிளாக பணியில் இருந்தேன். தற்போது, தலைமைகாவலராக பணியில் உள்ளேன். நான் விபத்து காலத்தில் பெற்ற சம்பளத்தைவிட தற்போது கூடுதலான சம்பளம் பெற்றுவருகிறேன் என்றால் சரிதான். எனக்கு முன்பு போல் பழைய வேலைகளை தற்போது செய்ய இயலவில்லை. நான் விபத்திற்கு பிறகு மருத்துவ விடுப்பு எடுத்து கொண்ட நாளிற்கு பிறகு பணியில் சேரும்போது மருத்துவ தகுதி சான்று கொடுத்துதான் பணியில் சேர்ந்தேன் என்றால் சரிதான். ஆனால் எனக்கு முன்பு போல் ஓடமுடியவில்லை. தற்போதும் நான் வேலைக்கு சென்றுவந்து கொண்டு தான் இருக்கிறேன். நான் வேலைக்கு தற்போது வரை சென்றுவருவதால் எனக்கு நிரந்தர ஊனமோ, சம்பள இழப்போ இல்லை என்றால் சரியல்ல. என்னால் காலை முன்பு போல் இயக்க என்னால் இயலவில்லை. சார்பு ஆய்வாளர் நேரடி தேர்வுக்கு என்னால் தகுதி பெற இயலாது. அதற்கு ஓடவேண்டியது கட்டாயம் என்னால் ஓட இயலவில்லை. நான் காவல்துறை சார்பு ஆய்வாளர் பணிக்கு விண்ணப்பித்திருந்தேன் என்றால் அதற்கசான ஆவணத்தை தாக்கல் செய்யவேண்டும் என்றும் அதை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக சார்பு ஆய்வாளர் பணிக்கு விண்ணபித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. நான் தொடர்சிகிச்சை எடுத்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. மேற்படி காலில் வைத்துள்ள பிளேட்டை நீக்குவதற்காக 1,25,000 ரூபாய் மருத்துவ செலவிற்காக தேவைப்படும். பிளேட்டை நீக்குவதற்காக மருத்துவர் பரிந்துரைத்துள்ளாரா என்றால் பிசியோதெராபிஸ்ட் கூறினார் அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. நான் மிகைப்படுத்தி இழப்பீட்டு தொகையை

கோரியிருக்கிறேன் என்றும் எனக்கு விபத்து காலத்திலும் தற்போதும் ஊதிய இழப்பு ஏற்படவில்லை என்றும் அதனால் மனுதள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.03.17 20:00:40 +0530

Sub Judge

Melur